# திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் அவசர ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு!



திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. மாநகர. ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அவசர ஆலோசனை கூட்டம் இன்று (06.02.2026 - வெள்ளிக்கிழமை) மாலை 4 மணிக்கு ஆவடி ஹவுசிங் போர்டு கிருஷ்ணா மஹாலில் திருவள்ளூர் மத்திய மாவட்ட அவைத் தலைவர் மா.ராஜி தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினரும் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினருமான ஆ. கிருஷ்ணசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ. ரமேஷ், தொகுதி பார்வையாளர்கள் நிவேதா ஜெசிகா. பி.டி.சி.செல்வராஜ்,மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபுகஜேந்திரன், மாநில சிறுபான்மையினர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மாவட்ட துணை செயலாளர்கள் வி.ஜெ.சீனிவாசன், எஸ். ஜெயபாலன், காயத்ரிஸ்ரீதரன், மாவட்ட பொருளாளர் பா.நரேஷ்குமார். பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ். கு.விமல்வர்ஷன், எம்.முத்தமிழ்செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், எஸ்.காஞ்சனாசுதாகர், எஸ்.சங்கர் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

கூட்டம் முன்னதாக பகுதிச் செயலாளர் ஜி.ராஜேந்திரன் வரவேற்புரை ஆற்றுகிறார் மேலும் இக்கூட்டத்தில் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1, பிப்ரவரி 9ஆம் தேதி அன்று திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெறும் அரசு விழாவில் கலந்து கொள்ள வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு பிரம்மாண்ட வரவேற்பு அளிப்பது குறித்து

2, பிப்ரவரி 11 ஆம் தேதி மகாபலிபுரம் திருவிடந்தை பகுதியில் நடைபெறும் பாக முகவர்கள் கூட்டத்தில் அனைவரும் பங்கேற்பது குறித்து

3, 2026 சட்டமன்றத் தேர்தல் மேற்கொள்ள வேண்டிய தேர்தல் பணிகள் குறித்து

4, மார்ச் 1 தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழாவை மிக விமர்சையாக கொண்டாடுவது குறித்து

5, கழக ஆக்க பணிகள்

**அமைச்சர் ஆவடி சா.மு.நாசர்,**
செயலாளர், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.

# களக்காடி எல்லப்பன் தலைமை!
# எம்.கிருஷ்ணமூர்த்தி பங்கேற்பு!
# ஜாபர்கான்பேட்டையில் பேரறிஞர் அண்ணா நினைவு நாள் நிகழ்ச்சி!

## திருவுருவச் சிலைக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் மாலை அணிவித்து மரியாதை!

*சென்னை, பிப்.6-*

சைதை மேற்குப் பகுதி தி.மு.க. சார்பில் 139வது வட்டம், ஜாபர்கான் பேட்டை கெங்கையம்மன் கோவில் அருகில் உள்ள பேரறிஞர் அண்ணா நினைவு நாளை முன்னிட்டு 3.2.2026 செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் களக்காடி எல்லப்பன் தலைமையில் பகுதி செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில் பேரறிஞர் அண்ணா திருவுருவ சிலைக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் மாலை அணிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் தா.மோகன்குமார், எம்.எஸ்.ஹரிபாபு, டி.கே.சிவமணி, த.சம்பத், ஆர். ரமேஷ், வி.பி.ஜானகிராமன், அட்கோ கமலநாதன், சை.மு.சேகர், எஸ்.பி.கோதண்டம், ஜி.கே. ராமச்சந்திரன், வீ. மதிவாணன், த.மணி, மு. கதிரவன், பொ.பரத்குமார், டி.எஸ்.முருகன், ஆ. அயாத்பாஷா, இ.வரதன், மா.ஏழுமலை, டி.எஸ்.பிரகாஷ், ஆர்.கிருஷ்ண குமார், சா.மு.மோகன், ஜி.எம்.பிரபு, கொடி பாலா, து.முரளி, சி.டி. காசிநாதன், வி.சபரி, இரா. சத்யா, ம.திலிப்பன், மற்றும் பலர் கலந்து கொண்டனர். பாபு எல்லப்பன் நன்றி கூறினார்.

தலைமை பொதுக்குழு உறுப்பினர் களக்காடி எல்லப்பன் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

## 2026 மார்ச் மாதத்திற்குள்

# வேலூர் விமான நிலையம் செயல்படத் தொடங்கிவிடும்!

## மக்களவையில் – டி.எம்.கதிர் ஆனந்த் கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதில்!

*புதுடெல்லி, பிப்.6-* வேலூர் விமான நிலையம் துக்கு தயாராகி வரும் மார்ச், 2026க்குள் பயணியர் போக்குவரத் என்று வேலூர் நாடாளு



மன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் மக்களவையில் எழுப்பிய கோரிக்கைக்கு சிவில் விமானப் போக்குவரத்து துறை அமைச்சர் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

03.12.2025 அன்று நாடாளுமன்ற மக்களவை பூஜ்ஜிய நேரத்தில் வேலூர் தொகுதி உறுப்பினர் எழுப்பிய அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயமாக உடான் திட்டத்தின் கீழ் வேலூர் விமான நிலையத்தை விரைவில் பயணியர் பயன்பாட்டுக்காக இயக்குவது தொடர்பான உரைக்கு ஒன்றிய அரசின் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் முரளிதர் மோஹோல் தனது பதில் கடிதத்தில் கூறியுள்ள விவரம் கீழ்வருமாறு:

தமிழ்நாட்டின் வேலூர் விமான நிலையம் உடான் திட்டத்தின் கீழ் 58.52 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரும் மார்ச், 2026க்குள் வேலூர் விமான நிலையம் செயல்படத் தயாராகிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தயார் நிலையில், 9 இருக்கைகள் கொண்ட விமானத்தைப் பயன்படுத்தி வேலூரை பெங்களூரு மற்றும் சென்னையுடன் இணைக்கும் RCS விமானங்களைத் தொடங்க ஏர் டாக்ஸி சேவையை தொடங்க முன்மொழிந்துள்ளது.

3. சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் திட்டத்தின் முன்னேற்றத்தை உன்னிப்பாக கவனித்து வருகிறது. UDAN திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மற்றும் பிற இடங்களில் பிராந்திய விமான இணைப்பை பாதுகாப்பான மற்றும் நிலையான முறையில் மேம்படுத்துவதற்கு அமைச்சகம் உறுதியாக உள்ளது.

இவ்வாறு ஒன்றிய அரசின் சிவில் விமானப் போக்குவரத்து துறை அமைச்சர் முரளிதர் மோஹோல் தனது பதில் கடிதத்தின் வாயிலாக தெரிவித்துள்ளார்.


பெருநகர சென்னை மாநகராட்சி
பேருந்து தட சாலைகள் துறை

பே. த. சா. து. ந. க. எண். பி3 / 0356 / 2026 (1 to 8)

**இரண்டு உறை மின்னணு குறுகியகால திறந்தவெளி ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு**

கண்காணிப்பு பொறியாளர் / பே.த.சா.து அவர்களால் கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு மறு - ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பல்வேறு மண்டலங்களில் உள்ள 586 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகள் மற்றும் உட்புற சாலைகளில் சாலை அமைத்தல் பணிகளுக்கு திட்டமிடுதல், கால அட்டவணையிடுதல், ஆரம்ப நிலைபுள்ளி விவரங்கள் சேகரித்தல், திட்ட செயலாக்கம், தரம் உறுதிபடுத்துதல், பணி நிறைவு மற்றும் பட்டிகள் தீர்வு செய்தல் வரையான செயல் முறைகளுக்கு திட்ட மேலாண்மை கலந்தாளுனர் (Project Management Consultant) நியமனம் செய்தல் (TURIF 2026).

பணியின் உத்தேச தொகை:- குறைந்த பட்சம்: **ரூ.15.00** இலட்சம், அதிகபட்சம்: **ரூ.36.00** இலட்சம்
முன்வைப்பு தொகை: மொத்த பணியின் உத்தேச தொகையில் **1%**

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : **10.02.2026** அன்று மாலை **3.00** மணி வரை
ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம்: **10.02.2026** அன்று மாலை **3.30** மணி

மேலும் விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.
செ.ம.தொ.இ / 776 / ஒப்பந்தப்புள்ளி / 2026 **கண்காணிப்புபொறியாளர் / பே.த.சா.து**


## தலைமைக் கழகப் பேச்சாளர்

# தருமபுரி இரா.தமிழ்ச்செல்வி மறைவு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, பிப். 6-**

**தலைமைக் கழகப் பேச்சாளர் தருமபுரி இரா. தமிழ்ச்செல்வி அவர்கள் நேற்று முன்தினம் (4.2.2026) இயற்கை எய்தினார்.**

**இச்செய்தியறிந்து வருந்திய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அன்னாரின் மறைவுக்கு தமது இரங்கலைத் தெரிவித்து வெளியிட்டுள்ள செய்தி வருமாறு:-**



திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைக்கழகப் பேச்சாளரும்,ஒருங்கிணைந்த தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட முன்னாள் மகளிர் அணி அமைப்பாளரும்,முன்னாள் மாவட்ட பொறுப்புக் குழு உறுப்பினரும்,முன்னாள் மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினரும் - இந்நாள் கழக சட்டத்துறை இணைச் செயலாளர் - முன்னாள் எம்.பி.வழக்கறிஞர் இரா. தாமரைச்செல்வனின் மூத்த சகோதரியும், வழக்கறிஞர். பி.உதயசூரியனின் தாயாருமான திருமதி. இரா. தமிழ்ச்செல்வி (68) அவர்கள் 04.02.26 - புதன் கிழமை அன்று மாலை உடல் நலக்குறைவால் இயற்கை எய்தினார் எனும் செய்தியறிந்து வருந்துகிறேன்.

அன்னாரை இழந்து துயருறும், அவரது இளைய சகோதரர் - தருமபுரி தொகுதி நாடாளுமன்ற கழக முன்னாள் உறுப்பினர் இரா.தாமரைச் செல்வன் உள்ளிட்ட அவரது குடும்பத்தினருக்கும், கழகத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## தேனி வடக்கு மாவட்டம் பெரியகுளத்தில்

# வடக்கு மாவட்ட மருத்துவரணி சார்பில் இலவச மருத்துவ முகாம்!

### அமைப்பாளர் வைகை ஸ்கேன் டாக்டர் பாண்டியராஜ் ஏற்பாட்டில்!

*தேனி, பிப். 6 -*

தேனி மாவட்டம் பெரியகுளம் விக்டோரியா நினைவு அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் திமுக வடக்கு மாவட்ட மருத்துவ அணி மற்றும் மதுரை அப்பல்லோ மருத்துவமனை இணைந்து இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. திரவியம் கல்வி குழுமத்தின் நிறுவனர், வைகை ஸ்கேன்ஸ் மற்றும் வடக்கு மாவட்ட மருத்துவரணி அமைப்பாளர் டாக்டர் பாண்டியராஜ். ஏற்பாட்டில் நடைபெற்ற இம்முகாமிற்கு கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் எல்.முக்கையா தலைமை வகித்தார்.

சரவணக்குமார் எம்.எல்.ஏ. முகாமினை துவக்கி வைத்தார். மாவட்ட அவைத்தலைவர் T பி.டி செல்லப்பாண்டியன், நகர செயலாளர் முகமது இலியாஸ், வடக்கு ஒன்றிய செயலாளர் பாண்டியன், தேனி நகர பொறுப்பாளர்கள் பாலமுருகன், நாராயண பாண்டியன், நகராட்சி தலைவர் சுமிதா சிவக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் முத்துராமலிங்கம், தேனி நகராட்சி தலைவர் ரேணுபிரியா பாலமுருகன், விடுதலை சிறுத்தைகள் கட்சி பெரியகுளம் சட்டமன்ற தொகுதி மாவட்ட செயலாளர் சுசி தமிழ்பாண்டியன், நிர்வாகிகள் பாசறை மது, நகர செயலாளர் ஜோதி முருகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் நகரம் சி.வி.நாயுடு சாலை ஹோட்டல் கேஎஃப்சி கட்டிடத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக அலுவலகத்தை மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, தலைமையில் கழக கொள்கை பரப்பு செயலாளர் முன்னாள் ஒன்றிய அமைச்சருமான முனைவர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. திறந்து வைத்தார். உடன் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. ராஜேந்திரன், மாநில மாவட்ட நிர்வாகிகள் கே.திராவிடபக்தன் , சண்முகநாதன், மாஸ்டர் சேகர், ஆர்.டி.இ.ஆதிசேஷன், ஓ.ஏ.நாகலிங்கம், இ.குருதாஸ், டாக்டர் வி.சி.ஆர்.குமரன், உதயமலர் பாண்டியன், சி.ஜெயபாரதி, எம்.மிதுன்சக்கரவர்த்தி, ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், வி.கிஷோர், மு.சுப்பிரமணியம், நகரச் செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன் உட்பட திமுக நிர்வாகிகள் உள்ளனர்

# தேரும்.... நானும்!



"அவருக்கு
முதலமைச்சராகும்
யோகம் ஜாதகத்திலேயே
இல்லை என்று
குறி சொன்ன
பலரையும்
கோமாளியாக்கியவர்"..

"ஒருமுறை ஆட்சிக்கு
வந்த பின்
தொடர்ந்து இரண்டாம்
தடவை ஆட்சியை
தக்கவைத்தது இல்லை"
என ஆரூடம்
சொல்பவர்களின்
முகத்தில்
கரி பூசக் காத்திருப்பவர்..

எளிய மக்களின்
மகிழ்வான வாழ்வுக்கு
தன் ஆட்சித் திறத்தால்
அள்ளித் தந்திருக்கும்
அநேகத் திட்டங்கள்..

ஒன்றிய அரசின்
வஞ்சகத்தை
நெஞ்சுரத்தால்
எதிர்கொள்ளும்
துணிவு உறுதி..

அண்ணா மற்றும்
கலைஞரது
அரசியல் அனுபவங்களை
பக்கமிருந்து படித்த
அனுபவம்...

கொள்கை கொண்டு
அமைத்த கூட்டணியை
நெறி சார்ந்து
வழி நடத்தும்
நேர்மை...

எதிரிகள் ஏவும்
கணைகளை
கையில் பிடித்து
காதுகுடையும்

பதறாத பண்பு
கவனம் சிதறாத பக்குவம்..

மக்கள் தன்மீதும்
தான் மக்கள் மீதும்
கொண்டுள்ள
பரஸ்பர நம்பிக்கை..

வெறும் யூகங்களை
மட்டுமே நம்பாது
வியூகங்களால்
வெற்றியை
தொடர்ச்சியாக்கும்
மதிநுட்பம் ..

இப்படி

அன்பாலும்
அரவணைக்கும்
பண்பாலும்
படை நடத்தும்
திறத்தாலும்

பவள விழா கண்ட
இயக்கத்தை
பாரதத்தின்
அரசியலையே
தீர்மானிக்கும்

சரித்திரப்
பெட்டகமாக்குகிறது

முத்துவேல்
கருணாநிதி
ஸ்டாலின் அவர்களது
திராவிடத் தேரோட்டம்
என்றால்..

அதில்

கூட்டத்தில் ஒருவராக
நின்று
வடம் பிடிக்கும் வாய்ப்பு
நமக்கும் என்றால்
அது வாழ்நாள்
பாக்கியம் அல்லவா..



**மருது அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக்குழு
துணைத் தலைவர்



திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதி, கும்மிடிப்பபூண்டி கே.எல்.கே.அரசு ஆண்கள் மேனிலைப்பள்ளி ஆண்டு விழா போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவர்களுக்கு பரிசு பொருட்களை தலைமை செயற்குழு உறுப்பினர் கும்மிடிப்பபூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் மு.மணிபாலன், எஸ்.ரமேஷ், இரா.அறிவழகன், இரா.ரமேஷ், சகிலா அறிவழகன், எம்.கேசவன், மு.பாஸ்கர், அப்துல்கரீம், இஸ்மாயில், அர்ஜீனன், குப்பன், காளிதாஸ், மனோகரன், பாஅறிவழகன், கே.என்.பழனி, முரளி, சண்முகம், ப.பரத்குமார், அமுல்ராஜ், கஜேந்திரன், ஏலியம்பேடு பாலா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ஜோலார்பேட்டை நா. மணி
## பிப்ரவரி 6 (2013)



**வேலூர் மாவட்டம், ஜோலார்பேட்டை பேரூர் செயலாளர் மற்றும் நகரச் செயலாளராக 31 ஆண்டுகள் பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.**

**பேரூராட்சித் தலைவராக இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்கள் நலப் பணிகளை மேற்கொண்டார்.**

**கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**